005057

<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பு – 2022-2023 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடியினர்களுக்கு அடிப்படை வசதிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு / பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற திட்டங்களுக்கு ரூ.1718.03 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2)] துறை</u>**

**அரசாணை (ப) எண். 112** **நாள் 27.05.2022**

வைகாசி மாதம் 13-ஆம் நாள்,
பிலவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5 அவர்களின் கடிதம் ந.க.எண்.பமே/அ3/5009/2021, நாள் 11.03.2022 மற்றும் 25.03.2022

*******

**<u>ஆணை :-</u>**

2022-2023-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> "திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய 11 மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு / பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்"

2. மேலே படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி, அத்திபாடி கிராமம் பகுதியில் உல்ஜக்கடி முதல் கீழ்வலசு வரை உள்ள சாலைக்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.360.26 இலட்சமும், திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், நாயக்கனேரி மலை பழங்குடியினர் பகுதியில் தடுப்பணை கட்டுதல் பணிக்கு ரூ.4.95 இலட்சமும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரண்டு சாலை வசதி பணிக்கு ரூ.557.25 இலட்சமும், திருச்சி மாவட்டம் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.48.40 இலட்சமும், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பள்ளங்கி கோம்பை,

C05057



பாரதி அண்ணா நகர் பழங்குடியினர் காலனி அடுக்கம் காலனி மேடு மற்றும் பொழம்பதி பழங்குடியினர் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.58.00 இலட்சமும், ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், கும்தபுரம் கானகரை, கேர்மாளம், மந்தைக்காடு, பெடர்பாளையம் நீர்க்குண்டி, வைத்யநாதபுரம், மந்தைக்காடு, செல்லுமித்தொட்டி, பசகுட்டை ஆகிய பழங்குடியினர் காலனிகளுக்கு சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.165.42 இலட்சம் மற்றும் பர்கூர் ஊராட்சிக்கு சாலை வசதிக்கு ரூ.255.45 இலட்சமும் மற்றும் நாமக்கல், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, திருப்பத்தூர் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகள் மற்றும் விடுதிக்கு கட்டிட பராமரிப்பு / பழுது பார்ப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.268.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1718.03 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் தடுப்புசுவர் ஏற்படுத்தும் பணிக்கு ரூ.360.26 இலட்சமும், திருப்பத்தூர் மாவட்டத்தில் தடுப்பணை கட்டும் பணிக்கு ரூ.4.95 இலட்சமும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சாலை வசதிகள் ஏற்படுத்துவதற்கு ரூ.557.25 இலட்சமும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளுக்கு அடிப்படைவசதி ஏற்படுத்துவதற்கு ரூ.48.40 இலட்சமும், திண்டுக்கல் மாவட்டத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.58.00 இலட்சமும், ஈரோடு மாவட்டத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை ஏற்படுத்துவதற்கு ரூ.420.87 இலட்சமும் மற்றும் நாமக்கல், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்களுக்கான கட்டிட பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் நல மாணவியர் விடுதிக்கு பக்கச்சாலை நடைபாதை அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.268.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.17,18,03,000/-க்கு(ரூபாய் பதினேழு கோடியே பதினெட்டு இலட்சத்து மூன்றாயிரம் மட்டும்) இணைப்புகளில் உள்ளவாறு 2022-2023-ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> 4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 02 பழங்குடியினர் நலன் -796 பழங்குடியினர் பகுதித் துணைத்திட்டம் – மாநிலச் செலவினங்கள் JA விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்.
> IFHRMS (த.தொ.கு. எண் 4225 02 796 JA 41601)

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாகவும், மற்ற ஏனைய பணிகளை சம்மந்தப்பட்ட திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாகவும் மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பணிகளை மேற்கொள்ள உரிய செயல்முறை ஆணையினை வெளியிடுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.23779/நிதி [ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்]/2022, நாள் 27.05.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர்கள், திருவண்ணாமலை, திருப்பத்தூர்,
திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர்,
நீலகிரி, சேலம், கள்ளகுறிச்சி, தருமபுரி
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை,
கள்ளக்குறிச்சி, ஈரோடு.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி.
திட்ட அலுவலர்கள், பழங்குடியினர் நலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர்,
திருச்சி, நாமக்கல், சேலம், கள்ளகுறிச்சி, தருமபுரி.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 008.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-600 009.
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை – 600 009.
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/அநமு1) துறை,
சென்னை-600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/05/2022

பிரிவு அலுவலர்

27/05/2022